ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2464/06 - 2025 නොවැම්බර් මස 25 වැනි අඟහරුවාදා - 2025.11.25

2464/06 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 25 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: Bu/Ln/1/1/7.

காணி அமைச்சின் இல.: LD/05/2001/VEP/70.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ், நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மேல் மாகாணத்தின் களுத்துறை மாவட்டத்திலே புலத்திங்கள பிரதேச செயலாளர் பிரிவில் கிரிமெடி வலகட கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட வரைபடத்திலே 3761, காணித் துண்டு இல. 1 இல் குறிப்பிடப்படும் மில்லகந்த தோட்டம் (எம்பரகல பிரிவு) காணியின் விஸ்தீரணம் 19.706 ஹெக்டயார் காணியின் எல்லைகள் கீழ் வருமாறு :

**01. துண்டு இல. 01 - மில்லகந்த தோட்டம் (எம்பரகல பிரிவு); விஸ்தீரணம் : 19.706 ஹெக்டயார்.**

வடக்கு : டபிள்யூ.எல். லீலாரத்ன மற்றும் ஏனையோர் உரிமை கோரும் பொடதும்பகாவத்த, டபிள்யூ.எல். பேத்ரிக் மற்றும் ஏனையோர் உரிமை கோரும் தங்கஹ கும்புர தோட்ட வீதி, ஹொரனை பெருந்தோட்ட கம்பனி உரிமை கோரும் மில்லகந்த தோட்டம், டபிள்யூ.எல். கருணாசேன மற்றும் ஏனையோர் உரிமை கோரும் ஹல்கஸ்தென்னயாய; கிழக்கு : டபிள்யூ.எல். பேத்ரிக் மற்றும் ஏனையோர் உரிமை கோரும் தங்கஹ கும்புர தோட்ட வீதி, ஹொரனை பெருந்தோட்ட கம்பனி உரிமை கோரும் மில்லகந்த தோட்டம், டபிள்யூ.எல். கருணாசேன மற்றும் ஏனையோர் உரிமை கோரும் ஹல்கஸ்தென்னயாய, எஸ்.டபிள்யூ. மத்துமபால உரிமை கோரும் மெனேக்கடெல்ல, டபிள்யூ.எல். சிரிசேன மற்றும் ஏனையோர் உரிமை கோரும் வத்துரான; தெற்கு : ஹொரனை பெருந்தோட்ட கம்பனி உரிமை கோரும் மில்லகந்த தோட்டம், எஸ்.டபிள்யூ. மத்துமபால உரிமை கோரும் மெனேக்கடெல்ல, பீ. கருணாசேன மற்றும் ஏனையோர் உரிமை கோரும் ஹல்கஸ்தென்னயாய, டீ. பேமவதீ மற்றும் ஏனையோர் உரிமை கோரும்



*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

வத்துரான, எம். ஜூலியஸ் சிங்ஞோ மற்றும் ஏனையோர் உரிமை கோரும் கால்வாய் மற்றும் கஹடகஹவத்த; மேற்கு : ஹொரனை பெருந்தோட்ட கம்பனி உரிமை கோரும் மில்லகந்த தோட்ட கால்வாய், எம். மித்ரசேன மற்றும் ஏனையோர் உரிமை கோரும் அளபொதகும்புர, எம். குணேரிஸ் மற்றும் ஏனையோர் உரிமை கோரும் படதும்பகஹவத்த, எம். ஜூலியஸ் சிங்ஞோ மற்றும் ஏனையோர் உரிமை கோரும் கஹடகஹவத்த.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2026 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 10 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு புலத்சிங்கள பிரதேச செயலாளர் அலுவல கத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தை களின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2026 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 10 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

கே.டீ.கே. சுலோச்சனி,
பிரதேச செயலாளர்,
புலத்சிங்கள.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
புலத்சிங்கள,
2025, நவெம்பர் 17.

EOG 11 - 0183

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.